**SC.No. 18/2021**

**நாள்..** 25.10.2025

**அ.சா. 3 –** முத்துலெட்சுமி க/பெ. ராஜேந்திரன்

(எதிரிகள் 1, 9 இறப்பு, எதிரிகள் 2 முதல் 4, 7, 8, 10, 11, 14, 16, 19 ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜர்..

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

அம்மன் கோவில் தெருவிக்கும் போலயன் நகருக்கும் இடையே 3 கிமீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். போலயன் நகரில் 4, 5 வீடுகள்தான் இருக்கும் என்றும், தென்னை மரங்களும், பனை மரங்களும் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். போலயன் நகரில் சரியான தெரு அமைப்பும், வெளிச்சமும் கிடையாது என்றால் சரிதான். செல்வம் வீடு 10 X 10 அடி அளவுள்ள சிறிய ஓட்டு வீடு என்றால் சரிதான். காதுகுத்து நிகழ்வு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடத்தப்பட்டு அதன் பிறகு கலந்து கொண்டவர்கள் கலைந்து செல்வதுதான் வழக்கம் என்றால் சரிதான். வீடு சிறிய வீடு என்பதால்தான் வருகிறவர்கள் சாப்பிடுவதற்காகத்தான் பந்தல் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். வெளியில் இருந்து வருகிறவர்கள் அடையாளம் கண்டு வருவதற்காகத்தான் மைக்செட் போடுவார்கள் என்றால் சரிதான். பொதுவாக காதுகுத்து நிகழ்ச்சிக்கு வரும் ஆண்கள் மதுபானம் அருந்திவிட்டுத்தான் நிகழ்வு நடக்கும் வீட்டிற்கு வருவார்கள் என்றால் சரிதான். பொதுவாக காதுகுத்து நிகழ்ச்சிக்கு வரும் ஆண்கள் மதுமானம் அருந்தி வருவார்கள் என்பதால் நிகழ்ச்சி முடிந்த உடன் மைக்செட் போடுபவர்கள் மைக் செட்டை கழற்றி சென்று விடுவார்கள் என்றால் சரிதான். செல்வம் வீட்டில் நடந்த காதுகுத்து நிகழ்வும் 11.00 – 11.30 மணிக்கு முடிந்துவிட்டதால் மைக்செட் போட்டவர் கழற்றி சென்றுவிட்டார் என்றால் சரிதான். நான், என் கணவர், மகன் மூவரும் காதுகுத்து நிகழ்ச்சி முடிந்தஉடன் எங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். பொதுவாக மைக்செட் போட்டவர் கழற்றி சென்றுவிட்டால் வீட்டிற்குள் மட்டும்தான் மின்சார வெளிச்சம் இருக்கும் என்றும், வீட்டிற்கு வெளியே இருக்காது என்றும் சொன்னால் சரிதான். எங்கள்

வீட்டில் மின்விளக்கு, மின்விசிறி உள்ளது என்றால் சரிதான், அதனால் செல்வம் படுத்து துாங்குவதற்கு வசதி இருக்காது என்பதால் துாங்குவதற்கு எங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். என் மகன் பிக்கப் வேன் வைத்து ஓட்டி வந்ததால் சில சமயங்களில் வீட்டிற்கு வருவார் அல்லது வராமல் கூட இருப்பார் என்றால் சரிதான். என் மகன் வேன் வைத்து ஓட்டி தொழில்செய்து வருவதால் வந்து விடுவான் என்ற நம்பிக்கையில் எப்போதும் தேடமாட்டோம், இருப்போம் என்றால் சரிதான். மறுநாள் காலை என் மகன் விஜய் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்க்கப்பட்டுள்ளது தெரிந்துதான் சென்றோம் என்றால் சரிதான். செல்வம் வீட்டிலிருந்து கலாம் நகர் 4 கிமீ தள்ளி உள்ளது என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனைக்கு செல்லும்போது காலை 09.00 – 09.30 மணி இருக்கும் என்றால் சரிதான். என் மகனை யார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாகவே போலிசார் மருத்துவமனைக்கு வந்த என் மகனிடம் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நானும், என் கணவரும்தான் வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். என் கணவரிடம் என் மகனுக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போலிசார் கேட்டதால்தான் என் கணவர் கையெழுத்து போட்டார் என்றால் சரிதான், எனக்கோ,என் கணவருக்கோ அவர் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். 27 விஜய்க்கும், பூமிநாதனுக்கும் எங்கு வைத்து, யாரால் காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும், என் கணவரும் சம்பவத்திற்கு முன்பாக எந்த பிரச்சனையிலும் ஈடுபட்டது கிடையாது என்றால் சரிதான். போலிசார் சம்பவம் இப்படி நடந்தது என்று சொன்னதை நம்பித்தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நானும், என் கணவரும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் அம்மன் கோவில் தெருவில் உள்ள எங்கள் வீட்டில்தான் படுததிருந்தோம் என்றால் சரிதான். என் மகன் விஜய் சம்பவம் நடந்த அன்று எங்கள் வீட்டிலிருந்துதான் வேலைக்காக வெளியே சென்றார் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், ஏற்கனவே முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்துத்தான் சொன்னேன் என்றால் சரிதான்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை:–

கடந்த 21.11.2022ம் தேதி நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தபோது 20.05.2018ம் தேதி என் கொளுந்தன் செல்வம் வீட்டு காதுகுத்து நிகழ்விற்காக போலயன் நகருக்கு நான், என் கணவர் மற்றும் மகன் ஆகியோர்கள் சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். காதுகுத்து நிகழ்வு முடிந்த பிறகு நான், சரண்யா, உத்தமி, பூபதி, பஞ்சா, கோவிந்தம்மாள், பாரதி ஆகிய அனைவரும் செல்வம் வீட்டில் படுத்துக்கிடந்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். செல்வம் வீட்டில் நடந்த காது குத்து நிகழ்விற்கு போடப்பட்டிருந்த பந்தலில் என் மகன், பில்லாணி, 27 விஜய், என் கணவர் ராஜேந்திரன், பூமிநாதன் மற்றும் செல்வம் ஆகியோர் படுத்திருந்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். இரவு 09.30 மணியளவில் வெளியே அலறல் சத்தம் கேட்டு வீட்டில் இருந்த நானும் மற்ற பெண்களும் வெளியே வந்து பார்த்தபோது பூமிநானும், 27 விஜயும் இறந்துகிடந்தார்கள் என்றும், என் மகன் விஜய்க்கு தலை, வலதுபக்க கழுத்து மற்றும் வலதுபக்க மணிக்கட்டு ஆகிய இடங்களில் காயம்பட்டு கிடந்தார் என்றும், அப்போது எதிரிகள் பிரகாஷ், முனியசாமி, அருண், தர்மா, சிவா, கிருஷ்ணமூர்த்தி, முத்துமாரி, பாபு ஆகியோர்கள் கைகளில் அருவாள், கம்பி, கம்பு, கத்தி ஆகிய ஆயுதங்களுடன் இருந்தார்கள் என்றும், எங்களை கண்டவுடன் ஓடிவிட்டார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். என் மகன் விஜயை எதிரிகள் முத்துமாரியும், கிருஷ்ணமூர்த்தியும் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். காயம்பட்டு கிடந்த என் மகன் விஜயை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். என் மகன் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் அங்கு வந்து விசாரித்தபோது என் மகன் கொடுத்த புகார் வாக்குமூலத்தை எழுதிக்கொண்டார்கள் என்றும், அவ்வாறு எழுதிக்கொண்டதில்தான் அறிவேன் சாட்சியாக என் கணவர் கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். போலிசார் என்னை

விசாரித்தபோத நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் சொன்னேன் என்றும் தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களோடு சமாதானம் செய்து கொண்டு முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னதாகவும், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது வழக்கறிஞர் கேட்கும் கேள்விக்கு ஆமாம் எனவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**SC.No. 18/2021**

**நாள்..** 25.10.2025

**அ.சா. 2 –** ராஜேந்திரன் த/பெ. முனியசாமி

(எதிரிகள் 1, 9 இறப்பு, எதிரிகள் 2 முதல் 4, 7, 8, 10, 11, 14, 16, 19 ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜர்..

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை:–

கடந்த 21.11.2022 ம் தேதி இந்நீதின்றத்தில் சாட்சியம் அளித்தபோது 2018 ம் ஆணடு என் தம்பி செல்வம் நடந்த காதுகுத்து நிகழ்விற்காக நான், என் மனைவி, மகன் ஆகியோர்கள் சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். காதுகுத்து நிகழ்ச்சி முடிந்த பிறகு நான், என் மகன், பூமிநாதன், 27 விஜய் ஆகியோர் வீட்டின் முன்பு போடப்பட்டிருந்த பந்தலில் படுத்துகிடந்ததாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். இரவு 09.30 மணியளவில் படுத்திருககும்போது எதிரிகள் அனைவரும் அங்கு அருவாள், கம்பி, கம்பு ஆகிய ஆயுதங்களுடன் வந்தார்கள் என்றும் அவர்களில் தர்மாவும், கார்த்திக்கும் இந்தா படுத்திருக்காய்ங்கடா எல்லாரும் சுற்றி நில்லுங்கடா விடாதிங்கடா என்று சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எதிரி கார்த்திக் பூமிநாதனின் வலதுபக்க கழுத்தில் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எதிரி பிரகாஸ் 27 விஜயை அருவாளால் கையிலும், கழுத்திலும் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எதிரி அருண் 27 விஜயின் இடதுகை ஆள்காட்டி விரலில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எதிரி பீஸ்குட்டி என்ற முனியசாமி விஜயை கத்தியால் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். என் மகன் விஜயை எதிரிகள் முத்துமாரியும், கிருஷ்மூர்த்தியும் சேர்ந்து உச்சந்தலையிலும், வலதுபக்க கழுத்திலும், வலதுகை மணிக்கட்டிலும் வெட்டி காயப்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால்

போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எங்கள் அலறல் சத்தம் கேட்டு என் தம்பி வீட்டிற்குள் படுத்திருந்த என் மனைவி, சரண்யா, உத்தமி, பஞ்சா, பாரதி ஆகியோர்கள் ஓடிவரவும் எதிரிகள் அனைவரும் ஆயுதங்களுடன் ஓடிவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். அந்த இடத்தில் பூமிநாதனும், 27 விஜயும் இறந்து கிடந்ததாக இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். காயம்பட்டு கிடந்த என் மகன் விஜயை 108 ஆம்புலன்ஸ் மூலம் நானும், என் மனைவியும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். என் மகன் சிகிச்சையில்இருக்கும்போது போலிசார் அங்கு வந்து விசாரித்தபோது என் மகன் விஜய் புகார் வாக்குமூலம் கொடுத்தான் என்றும், அதற்கு ஆதரவாக நான் அறிவேன் சாட்சி என கையெழுத்து செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றும், எதிரிகள் அனைவரும் என் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் தற்போது அவர்களோடு சமாதானம் செய்து கொண்டு முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னதாகவும் குறுக்கு விசாரணையில் சொன்னதுபோல்தான் சம்பவம் நடந்ததாகவும், எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்று உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

**SC.No. 18/2021**

**நாள்..** 25.10.2025

**அ.சா. 1 –** விஜய் த/பெ. ராஜேந்திரன்

(எதிரிகள் 1, 9 இறப்பு, எதிரிகள் 2 முதல் 4, 7, 8, 10, 11, 14, 16, 19 ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜர்..

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம் வாலாந்தரவை கிராமம் என்றால் சரிதான். நான் எங்கு படித்தேன் என்றால் எங்கள் ஊரில்தான். சம்பவம் நடக்கும்போது நான் மைக்செட்போடும் கம்பெனியில் வேலை பார்த்துவந்தேனா என்றால் இல்லை. எதிரிகள் அனைவரையும் சம்பவம் நடப்பதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு உறவினர்களான விஜய், பூமிநாதன் ஆகியோர்கள் மீது நிறைய குற்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். பொதுவான ஊரில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் மைக்செட் மற்றும் விளக்குகள் போடும் நபர் நிகழ்ச்சி முடிந்த உடன் உடனே அதை கழற்றி சென்றுவிடுவார் என்றால் சரிதான். செல்வம் வீட்டில் காதுகுத்து நிகழ்ச்சி பகல் 11.00 மணியளவில் முடிந்துவிட்டது என்றால் சரிதான். பொதுவாக நிகழ்ச்சி முடிந்த உடன் நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் அனைவரும் உடனே கலைந்து சென்றுவிடுவார்கள் என்றால் சரிதான். நான் காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் சேரும் போது நல்ல சுயநினைவுடன் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி மருத்துவரிடம் நானே கூறினேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்லும்போது என்னுடன் விஜய், பூமிநாதன் வரவில்லை என்றால் சரிதான். நான் மட்டுமே தனியாக சென்றேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் சம்பவம் எங்கு நடந்தது, எத்தனை நபர்கள் வந்தார்கள் என சொன்னேன் என்றால் சரிதான். விஜய் மற்றும் பூமிநாதன் வீடுகள் நான் வசிக்கும் அம்மன் கோவில் தெருவில்தான் உள்ளது என்றால் சரிதான். விஜயும், பூமிநானும் காதுகுத்து நிகழ்வு முடிந்தஉடன் அவர்களது வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். இராமநாதபுரம் நகரில் கலாம் நகர் என உள்ள விவரம் தெரியும் என்றால் சரிதான். காவல் அதிகாரிகள் என்னை

ஒருமுறைதான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சேர்ந்த மறுநாள்தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும்போது காலை 09.00 மணி இருக்கும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் யார் எழுதியது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் எழுதுவதற்கு முன்பே என்னிடம் கையெழுத்து வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். மறுநாள் காலை 09.00 மணிக்கு விசாரித்தபிறகு அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ–1 புகார் வாக்குமூலத்தில் யார்யார் பெயர்கள் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பிறகு பூமிநாதனையும், விஜயையும் யார், எப்போது, எங்கிருந்து கொண்டு வந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள 19 எதிரிகளையும் ஏன் சேர்த்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவரிடம் எனக்கு ஏற்பட்ட சம்பவம் கலாம் நகரில் நடந்ததாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விஜய்க்கும், பூமிநாதனுக்கும் எங்கு வைத்து காயங்கள் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். இருதரப்பிலும் பலதரப்பட்ட வழக்குகள் உள்ளதால் போலிசார் இவர்கள்தான் செய்திருப்பார்கள் என ஆலோசனை செய்து எதிரிகள் மீது வழக்கு போடப்பட்டது என்றால் சரிதான். ஆயுதங்களை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தையும் குறிப்பாக ஆயுதங்களை போலிசார் சொல்லிக்கொடுத்துதான் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் ஒரு இடத்திலும், விஜய்க்கும், பூமிநாதனுக்கும் ஏற்பட்ட காயங்கள் வேறு இடத்திலும், வேறு நேரத்திலும் ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு யார், எதற்காக தாக்கினார்கள், காயம் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். இருட்டில் சம்பவம் நடைபெற்றதால் நான் எதையும் பார்க்க முடியவில்லை என்றால் சரிதான்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை:–

நான் கடந்த 21.11.2022 ம் தேதி நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தபோது எனக்கு ஏற்பட்ட காயம் அம்மன்கோவில் தெருவில் செல்வம் வீட்டு முன்பு வைத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 20.05.2018 அன்று என்

சித்தப்பா செல்வம் வீட்டில் காதுகுத்து நடந்ததாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த விழாவிற்கு நான், என் அப்பா ராஜேந்திரன், அம்மா முத்து லெட்சுமி மற்றும் ஊர்க்காரர்கள் சென்றதாக நீதிமன்றத்தில் சாட்சியம்அளித்துள்ளேன் என்றால் சரிதான், போலிசார் சொல்லச்சொன்னதால் சொன்னேன். காதுகுத்து நிகழ்ச்சி முடிந்த பிறகு நான், என் அப்பா, 27 விஜய், பூமிநாதன், சசி, பில்லாணி, செல்வம், பஞ்சவர்ணம் ஆகியோர்கள் பந்தலின் கீழ் படுத்திருந்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். அந்த சமயத்தில் என் அம்மா முத்து லெட்சுமி, சாட்சிகள் பாரதி, சரண்யா, அப்பத்தா பூபதி, செல்வம் மனைவி பஞ்சா ஆகியோர்கள் வீட்டிற்குள் படுத்திருந்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். அன்று இரவு எதிரிகள் அனைவரும் அருவாள், கம்பி, கம்பு ஆகிய ஆயுதங்களுடன் வந்து துாங்கிக்கொண்டிருந்த எங்களை சுற்றி நின்று கொண்டு, அதில் எதிரி தர்மா, கார்த்திக் ஆகிய இருவரும் இந்தா படுத்திருககானுங்கடா மற்றவர்கள் எல்லாம் சுற்றி நின்றுக்கொள்ளுங்கடா என்று சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். அப்போது எதிரி கார்த்திக் பூமிநாதனின் கழுத்தில் வெட்டியதாக சொல்லியுள்னேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எதிரிகள் பிரகாஷ், கார்த்திக் இருவரும் 27 விஜயின் வலதுபக்க கழுத்தில் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எதிரி அருண் 27 விஜயின் கழுத்தில் அருவாளால் வெட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எதிரி முத்துமாரி என்னுடைய உச்சந்தலையிலும், வலதுபக்க கழுத்திலும் வெட்டியதாக சொல்லியுள்னேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். எதிரி கிருஷ்ண மூர்த்தி என்னுடைய வலதுபக்க மணிக்கட்டிலும், வலதுபக்க பின்கையிலும் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். மற்ற எதிரிகள் அனைவரும் எங்களை சுற்றி நின்றுகொண்டதாகவும் நாங்கள் காயம்பட்டு அலறிய சத்தம்கேட்டு வீட்டிற்குள் படுத்திருநத என் அம்மா முத்துலெட்சுமி, பஞ்சா, பாரதி, சரண்யா ஆகிய எல்லோரும் ஓடிவரவே எதிரிகள் அனைவரும் ஆயுதங்களுடன் ஓடிவிட்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். அந்த

இடத்தில் பூமிநாதனும், 27 விஜயும் இறந்து கிடந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். காயம்பட்ட என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் என் அப்பாவும், அம்மாவும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். நான் சிகிச்சையில் இருந்தபோது கேணிக்கரை போலிசார் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றும், அதில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலிசாா் என்னை விசாரிக்கும்போது சொன்னேன் என்றும், எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.